RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22432

OPEN ACCESS

# தொல்காப்பியம் காட்டும் நிறக்கோட்பாடுகள்

க. சுவாதி [அ, *], எ. கற்பகம் [அ]

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது), கரூர்- 639007, தமிழ்நாடு, இந்தியா.

# Colour Principles as shown by Tholkappiyam

K. Swathi [a, *], E. Karpagam [a]

[a] Department of Tamil, Government Arts College, (Affiliated to Bharathidasan University), Karur-639007, Tamil Nadu, India

* Corresponding Author: thikamal12@gmail.com

Received: 18-02-2022
Revised: 06-09-2022
Accepted: 28-09-2022
Published: 17-10-2022

**ABSTRACT**

Among the grammar books available today, Tholkappiyam sought a unique name and fame all over the world. Tholkappiyam is a repository of too much news that current psychologists wonder if it describes human behavior many thousands of years ago. Tholkappiyam is a pedagogical book of ethics and psychology. It tells us about warfare, heroism, culture, language, marriage, and other religious activities and emotions. In addition, it provides much information about climate, land discrimination, and nature. Tholkappiyam describes the characteristics and lifestyles of the ancient peoples and the way of life of nature. In this, the great colours of nature have been used to depict different colours in the way of life. Each color has a unique character and exhibits a specific character.

**Keywords:** Tholkappiyam, Grammar, Numbers, Alphabets, Sangam Literature

## முன்னுரை

இலக்கியத்தில் நிறம் அல்லது வண்ணம் இருவகையில் இடம் பெறுகின்றது. பொருளின் தோற்றம் பொலிவை விளக்கும் நிலையில் வண்ணம் தெளிவாகப் புலப்படும் நிலை ஒன்று: பண்பினைக் குறிப்பாகப் புலப்படுத்தும் குறியீடு நிலை மற்றொன்று. இவ்விரண்டு வகையிலும் தமிழ் இலக்கியத்தில் நிறம் பெற்றுள்ள பாங்கினையும் அவற்றை எவ்வாறு சங்ககால ஓவியங்களில் இணைந்து வெளிப்படுத்தியுள்ளனர்.

## நிறம்

வானவில்லின் தோற்றங்கொண்டு நிறங்கள் ஏழு என்பர். ஆயினும் இயற்கையின் வெளிப்பாட்டில் வண்ணங்கள் போல் வண்ண்ஙகள் தோற்றப்பொலிவு பெறும். தமிழ் இலக்கியங்களில் பயின்றுவரும் வண்ணம் நிறம் என்றால் என்ன? வண்ணம் என்றால் அழகு எனப் பொருள்படுகிறது. தமிழ் இலக்கியங்கள் நிறங்களைப் பொருள் விளக்கும் உவமையாகவும், செயல் நிலை ஓவியமாகவும், உவமையோடும் அமைந்திருப்பதை வெளிப்படுத்துகின்றன. குறியீடுகளாகக் கையாளப்படும் பலவகை உத்திகளில் இடம், காலம் சூழல் இவற்றான் யாண்டு கையாளப்படும் விழுமியம் வண்ணக் குறியீடுகளுக்கு உண்டு. நிறங்கள் வண்ணத் தொடர்புக் கூறுகளில் வெளிப்படை விளக்கம் பெற்றும் பயிலும் இவ்வெளிப்படை விளக்கங்களை நான்கு வகையில் பிரித்தறியலாம்.

1. விளக்கத் தெளிவுக்கு நிறம் நேராக வருதல்
2. உவமையோடு வருதல்
3. நிகழ்வுக் கூறு
4. நிறக் கூட்டம் பயின்று வருதல்

## நிறங்களும் வெளிப்பாட்டு மரபும்

தமிழ் இலக்கியங்களில் நிறம் குறித்த பல செய்திகள் விளக்கமாகப் பேசப்பட்டுள்ளன. தமிழ் இலக்கண நூல்களும் நிறம் நிறத்தோடு தொடர்புடைய பல்வேறு பண்பாட்டுச் செய்திகளையும் செய்யுள் இலக்கணம் நிறக் கோட்பாட்டுத் தொடர்பில் இணைத்துப் பார்ப்பதற்குப் பல வாய்ப்புகளையும் வெளிப்படுத்துகின்றது. தமிழர்களின் நிறம் குறித்த மரபும் பண்பாடும் தொடர்ந்து இலக்கியங்களிலும் இலக்கணங்களிலும் முறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## தொல்காப்பியம்

தொல்காப்பியத்தில், யாப்பு-பாட்டியலில், சீர், தளை, அடி, தொடை, பாக்களின் பெயர்கள் நிறச்சொல் தொடர்பில் இணைவு கொண்டுள்ளன. தொல்காப்பியத்தில் வெள்ளை, சிம்மை (ஆகிய சிவப்பு அல்லது காவி) எனும் நிறங்கள் தொடர்புபடுத்தப்படுகின்றன.

வெண்சீர் (தொல்)

வெண்தளை (தொல்)

வெண்பா (தொல்)

வெண்பா உரிச்சீர் (தொல்)

வெண்பாட்டு (தொல்)

வெள்ளடி (தொல்)

வெள்ளை (தொல்)

என வரும் தொல்காப்பியச் சொற்களாகிய சீர், தளை, பா, பாட்டு, அடி என்பனவற்றுடன் வெள்ளை நிறம் (வெண்மை, வெள்ளை) கவிலி ஆகிய சொற்கள் இணைவாகவுள்ளன. இங்கு எழுத்து, மொழி ஆகிய இரண்டும் குறிக்கப்பிடத்தக்கது.

## தொல்காப்பியம் காட்டும் நிறம்

தமிழரின் மிகத் தொன்மையான நூல் தொல்காப்பியமாகும். இது அன்றைய தமிழரின் பண்பாட்டை அறிய உதவும் கருவியாக உள்ளது. தொல்காப்பியர் நிறங்களைப் பற்றிய பல செய்திகளைத் தருகின்றார். அவை தமிழரின் ஓவியக் கலையின் வளர்ச்சியை அறிய அறிய மிகப்பெரும் துணையாக அமைகின்றன.

நிறம் என்பது 'நிறு' என்பதன் அடியாகத் தோன்றியிருக்கலாம் எனக் கருதுவர். இருப்பினும் மார்பைக் குறிக்க நிறம் எனும் சொல் ஆளப்படுகிறது. எதிரியின் படையைத் தன்கண் நிறுத்திக் கொள்ளுதலின் அதாவது படை ஊடுருவிச் செல்லாதவாறு தன் வலிமையால் தடைப்படுத்திக் கொள்ளுதலின் "மார்பு நிறம் எனப்பட்டது" (Arunachalam, 1994).

நிறம் என்னும் சொல்லுக்கு இணையான பொருள் சுட்டும் வண்ணம் பல சொற்கள் அமைந்துள்ளன. அவையுணர்த்தும் பொருள் நிறத்தையே சார்ந்தும் வெளிப்படுகின்றன. இதனைக் கரு, கெழு, குணம், கொழுமை, சாயல், வருணம், பயப்பு, கறை என வரும் சொற்களால் அறியலாம்.

மேலும், பல்வேறு இணைச் சொற்கள் பிற்காலத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதைப் பிங்கல நிகண்டு ஆகிய நிகண்டு போன்றவை எடுத்துக்காட்டும். அவை,

"வரி, புகர், இராகம், மேனி

உரு, வண்ணம், சந்தம், மாமை

செழுமல், பிறங்கள், கேழ், கெழு"

என்பனவாக அமைவன, உரு, கரு எனும் சொற்கள் எடுத்தாளப்படுகின்றன. உரு எனும் சொல்லும் குரு எனும் சொல்லும் நிறத்தையே சுட்டுவன என்பதை,

"வினைபயன் மெய்யுருஎன்ற நான்கே

வகைபெற வந்த வுவமத் தோற்றம்"

"குருவும் கெழுவும் நிறனா கும்மே"

எனும் தொல்காப்பிய நூற்பாக்களால் அறியலாம். பச்சை நிறமானது பசப்பு எனும் பொருள் கொள்ளுமாறு அமைகின்றது (Arunachalam, 1994).

"பசப்பு நிறனாகும்"

"பசலை பாய்தல்"

எனும் தொல்காப்பிய வரிகள் காட்டும். இங்கு பசவை என்பது பச்சை நிறத்தைச் சுட்டும் சொற்களாகவே உள்ளன (Arunachalam, 1994). பொதுவாகத் தொல்காப்பியத்தில் இரண்டே நிறங்கள் தெளிவாகச் சுட்டப்பெறுவனவாகும்.

"கருப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள"

எனவரும் தொடரில் கருப்பு, சிவப்பு எனும் இரண்டு நிறங்கள் பற்றியும் அவை உணர்த்தும் தன்மைகள் பற்றியும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன (Arunachalam, 1994). இதில் சுட்டப்படும் கருமை எனும் சொல் கருமை நிறத்தன்மை அதிகமாகக் குறிக்க வருமிடத்துக் கருப்பு என்றாகி வருகின்றது.

"மைவரை யுலகம்"

எனும் தொடரில் மை எனும் சொல் கருமை நிறத்தைச் சுட்டுகின்றது.

"நீ சிவந்திறுத்த நீரழி பாக்கம்"

எனவரும் தொடரால் வெகுளித் தன்மையைச் சுட்டும் நிலைதனை அறிய முடிகின்றது (Arunachalam, 1994).

"சேயோன் மேய மைவரை யுலகம்"

"மாயோன் மேய மன்பெரும் சிறப்பின்

தாவாவிழுப்புகழ்ப் பூவை நிலை"

எனும் தொல்காப்பிய வரிகள் சேயோன் என்பதற்குச் செம்மை நிறமுடையவன் என்பதையும், மாயோன் எனுமிடத்துக் கருமை அல்லது மா எனும் நீலநிறம் சுட்டப்படுவதையும் காணலாம் (Arunachalam, 1994). மா எனும் சொல்லாட்சியே மாமை என வருமிடத்து மாமை நிறத்தான் என்றும் பொருள் கொள்ளப்படுகின்றது.

"கடிலை கண்ணிய வேள்விநிலை"

எனவருமிடத்துக் கடிலை எனும் நிறம் குறிக்கப்படுகின்றது (Arunachalam, 1994). கடிலை நிறம் செந்நிறத்தைக் குறிக்கக்கூடிய ஒரு சொல்லாகும். எனவே தொல்காப்பியத்தில், கருப்பு, சிவப்பு எனும் இரண்டு நிறங்களே பேசப்படுகின்றன எனலாம். மா எனும் சொல்லாட்சியின் மூலம் கரு நிறம் பற்றியும், பசலை நிறம் என்பது பச்சையைக் குறிப்பதாகவும் கருதலாம். "தொல்காப்பியக் காலத்தில்

உடம்பிற்கு வண்ணம் தீட்டுவது, விலங்குகள் பறவைகள் போன்றவற்றை வண்ணம் தீட்டுவது, விலங்குகள் பறவைகள் போன்றவற்றை ஓவியமாகத் தீட்டுவது ஆகியவை இருந்துள்ளமையை அறிய முடிகின்றது" (Arunachalam, 1994).

தொல்காப்பியத்தில் நிறத்தைக் குறிப்பதற்கு வண்ணம் எனும் சொல் பயன்படத்தப்பட்டுள்ளது.

"வண்ணச் சினைக் சொல்"

"வண்ணத்தின் வடிவின்"

"வண்ணம் வடிவே"

"வண்ணம் பசந்து புலம்புறகாலை"

என வரும் தொல்காப்பியத் தொடர்களால் வண்ணம் எனும் சொல்லை அறியமுடிகிறது (Arunachalam, 1994).

பொதுவாக இந்த நான்கு இடங்கள் மட்டும் நிறத்தைக் குறிப்பனவாக உள்ளன. பிற இடங்களில் இசையினையும் பாவினத்தையும் குறிப்பதாக அமைகின்றன.

## நிறத்தன்மையும் கோட்பாடும்

நிறம் பற்றிய சொற்கள், நிறம் பெயர்கள், நிறத்தின் இயல்பு தன்மை குறித்துப் பல்வேறு பதிவுகளைத் தமிழக இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. தொல்காப்பியர் நிறத்தின் வழி குணவெளிப்பாடுகளை இணைவாகக் குறிப்பிடும் பொழுது கருப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள் எனக் கூறுவர்.

## செம்மை (சிவப்பு)

சங்க இலக்கியங்களில் செம்மை நிறம் பற்றிய செய்திகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. செம்மை நிறத்தை உணர்த்துவதற்குரிய இணைச் சொற்களாக சிவப்பு, துவர் செக்கர், சிவலை, கயிலை, அரக்கு எனும் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சே என்னும் சொல் சிவப்பு நிறத்தைக் குறிக்கின்றது.

"சேயுற்ற கார்நீர் வரவு"

சிவப்பு நிறத்தைச்சுட்ட சே என்னும் சொல் பயன்படுத்தியுள்ளனர் என்ற செய்தி அறியலாகின்றது (Puliyur Kesigan, 2009).

"கபில நெடுநகர்க்க கமழு நாற்றமொடு"

கபில என்பது செம்மை நிறம் என்று வெளிப்படுகின்றது (Puliyur Kesigan, 2009).

## வெண்மை

வெண்மை ஒரு அடிப்படை நிறமாகவே எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

"பைங்கழை பொதிகளைந்தன்ன வளர்பின்

வளையில் வறுங்கை யோச்சி"

என்னும் தொடரால் பசுமை கலந்த வெண்மையும் என்ற செய்தி புலப்படுகின்றது (Avvai Duraisamy pillai, 2010).

## மஞ்சள்

சங்க இலக்கியங்களில் மஞ்சள் நிறம் எவ்விடத்திலும் நேரடியாகச் சுட்டப்பெறவில்லை. பொன்னை உவமைப்படுத்தும் பொழுதும் ஒள் என்ற சொல் பயின்று வருமிடம் மஞ்சள் நேரடியான சொல்லாட்சியில்லை.

"பொன்னேர் மேனி மடத்தையொடு

வென்வேல் விடலை முன்னிய அரனே" (Dhatchanamoorthi, 2005)

"பொன்போல் மேனி தன்மகள் நயற்தோள்

பொன்னேர் மேனி நன்னலஞ் சிதைத்தோர்"

பொன் என்னும் சொல்லாட்சி பொன் போற் நிறத்தையும் மதிப்புமிக்க பொன் (பவுன்) போன்று போற்றிப் பாதுகாக்கத்தக மேனியையுடைய என்னும் பொருளும் காணலாம் (Avvai Duraisamy pillai, 2012).

## கருமை

"கருங்கை பொள்வாட் பெரும் பெயர் வழுதி" (Avvai Duraisamy pillai, 2010)

"அரும் பொருள் வேட்டம் எண்ணிக் கறுத்தோர்" (Annamalai, 2004)

கருமை செம்மைக்கு இணையாக பயன்படுத்தப்பட்டுள்ளது. கருமை என்பது பசுமை, நீலம் ஆகிய இரு நிறங்களை கலந்து காணப்பெறுவனவாகவும் கருத்தக்க சான்றுகளும் சங்க மருவிய காலத்து இலக்கியங்களில் காணப்படுகின்றன.

## நீலம்

"நீலநிறப் புன்னைத் தமியொள் கைதை"

"நீல் நிற ஒரி பாய்ஞ்தென நெடுவரை"

என்னும் நிறத்தைக் குறிக்க நீல, நீலம் என்னும் வர்ண வடிவங்கள் பேசப்படுகின்றன (Avvai Duraisamy pillai, 2012).

## ஒலி உருவமும் ஒளியுருவமும்

தொல்காப்பியர் காலத்தில் எழுத்துருவங்களுக்கு வண்ணங்களாகின எழுத்து என்பதற்கு, மொழி, சொல், வரைவு, ஓவியம் தீட்டுதல் எனப்பொருள் கொள்ளலாம்.

அவ்வாறாயின் எழுத்து என்பது உருவ வெளிப்பாட்டில் ஓவியமாகவும், ஒலி வெளிப்பாட்டில் சொல்லோவியமாகவும் அவற்றின் புலப்பாடு உத்தி வண்ணம் என்ற நிறமாகவும் அமைகின்றன.

வண்ணம் என்ற சொல் நிறம் என்ற முதன்மைப் பொருளை அளிக்கின்றது. ஆனால், 'வர்ண' என்ற வடசொல் 'வருணம்' எனப் பிராகிருதம் வாயிலாகவும் தோன்றிப் பின்னர் 'வண்ணம்' எனத தமிழில் வந்தது என்பர். எனவே, வண்ணம் எனும் நிறமும் வண்ணம் எனும் ஒலியும் தொடர்புடையதாகவே வெளிப்படுத்தப்படுகின்றன. ஒலிக்கும் ஜாதி பிரிக்கப்படுகின்றது. நிறத்திற்கும் ஜாதி பிரிக்கப்பட்ட ஒலிக்கும் இணைப்பு ஒப்புமை கொடுக்கப்படுகின்றது. ஒலி அலைகள் அதிர்வுகளை வழங்கும். அதிர்வுகள் நெறிப்படுத்தும் பொழுது ஒலியின் தன்மைகள் பண்டாக மாற்றம் பெற்றுப் பண்ணாக ஒலி உருவம் பெறும் ஏனெனில் மொழி ஒலிகளால் வரையப்படுவது. ஒலியின் வெளிப்பாடு பல்வகைகளில் பரவி எழுத்துருவம் பெறுகின்றது. எழுத்துருவம் ஒளி வடிவம் பெறும் பொழுது ஒளி உருவம் புலப்படுகின்றது. ஒளிரும் தன்மையை வண்ணம் வெளிப்படுத்துக்கின்றது. அதன் காரணமாகவே எழுத்துருவம் என்பது ஓவிய உருவமாகவும் பொருள் கொள்ளப்பட்டது ஒளியே

நிறங்களைத் தருகின்றது. ஒலி நாதமாகின்றது. ஒலியின் சேர்க்கை இசையாகிறது. ஒளியின் சேர்க்கை வண்ணமாகிறது. வண்ணம் நிறத்தையும் செயலையும் வெளிப்படுத்துகின்றது. செயல் காரண காரியங்களுக்குள் அடங்குகின்றது. நிறம் வண்ணத்தில் வெளிப்படுகிறது அது எழுத்தாகிறது. எழுத்து ஓவியமாகின்றது.

## சித்திர வண்ணம்

"நெடியவு குறியவும் நேர்ந்து உடன் உரூஉம்"

என வரும் தொடரில் ஈரெழுத்து கலவையால் ஒலி உருவம் சித்திர வண்ணம் ஆகின்றது என்பதைத் தொல்காப்பியர் உறுதி செய்கிறார் (Arunachalam, 1994).

தொல்காப்பியர் காலந்தொட்டு இலக்கணக் கோட்பாடு முறையில் நிறத்தைக் காணும்பொழுது வண்ணங்கள் இருபது என்பதும். அது பரந்து விரிந்து நூறு வண்ணங்கள் இருபது என்பதும் அது பரந்து விரிந்து நூறு வண்ணங்கள் ஆகியது என்பதும் தெரிகிறது. அவ்வாறு ஏற்படும் கலவையின் வெளிப்பாடு வண்ணம் நிறம் என்றமைந்து சித்திர வண்ணமாகின்றது. வடசொல் வர்ண சித்திரம் என்பது வண்ணம் தீட்டுதலைக் குறிக்கும் சோசித்திரம் என்பது கோடுகளால் வரையப்படுவதைக் குறிக்கும் கோடுருவம் தொன்மையான குறியீடு, எழுத்து வரி வடிவங்களையும் உருவங்களையும் குறிப்பது.

எனவே, ஒலியால் சுட்டப் பெற்ற சொல் அடுக்குகள் இலக்கணத்தில் அடங்கும் பொழுது எழுத்துருவம் பெறுகின்றன. அவை ஒளி வடிவம் பெறும் பொழுதும் எழுத்துருவம் (சித்திர உருவம்) என்றே அமைகின்றன. இவ்விரண்டினையும் இணைக்கும் மனிதனுக்கும் செயல்முறைக்கோட்பாடுகளின் வாயிலாக வர்ணம் தீட்டப்படுகின்றது. அதன் அடிப்படையில் ஒலியும், ஒளியும் கலப்பது உருவம், சித்திரம், எழுத்து, நாதம் என்றாகி விடுகின்றது. இதன் பொருட்டே நிறக்கோட்பாடு நிலை ஏற்பட்டுள்ளது எனக் கருதலாம்.

## வடிவம்

வடிவம், வடிவு ஆகிய ஓரடிப்படையிலான இரு சொற்களும் பல்பொருள் உரைக்கும் வண்ணம் நன்னிறம், நிறம் ஆகிய பொருள்களையும் தருகின்றன.

கம்பன் கவிதை வரிகளில் வடிவம் வடிவு ஆகிய சொற்கள் நிறமாகவே இடம் பெற்றுள்ளன. இதனை,

"மையோ மரகதமோ மறிகடலோ மழை முகிலோ

ஐயோஇவன் வவெ என்பது ஓர் அழியா அழகு உடையான்

வல்லி அம் குவளைக் கானத்து இடைஇடை மலர்ந்து நின்ற

அல்லி அம்கமலம் கண்டாள் அண்ணல் தனிவடிவம் கண்டாள்"

என வரும் தொடர் விளக்குகின்றது. எனவே, நிறம், வடிவு, வடிவம் என்ற உருவநிலைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆதலால் வடிவு என்றாலே நிறமாகிய வண்ணம் என்றாகியது (Gopala Krishanmachiriyar, 2011).

## உரு

உரு என்ற சொல் வடிவம், அழகு, உடல் ஆகிய மூன்று பொருளும் தருகிறது. உரு என்னும் சொல் உருத்து(தல்) என்னும் கோபவெளிப்பாட்டின் வடிவத்திற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை கம்பனின் மேற்கூறிய சொற்கள் விளக்குகின்றன.

"ஊழியின் உருத்திர உருவு கொண்டு"

என இலக்குவரின் நிறத்தை ஒப்புமையாகக் கம்பன் கூறியது காண முடியும். வெகுளுதல், வெகுளி ஆகிய குணத்தன்மைகளை உரு பெற்றதாகவும் கருதலாம். ஏனெனில், செந்நிறம் வெகுளிப் பொருளாதல் என்பது சங்கத் தமிழரின் வண்ணக் கோட்பாட என்பதால் வெகுண்டவன் நிறமாக உருத்திருத்தி என்றும் வெகுளுதலால் உருத்து எழா என்றும் கம்பன் கூறுகிறார். எனவே, உரு என்பது உருவில் அமைவது என்றும் கருதலாம் உரு என்பதற்கு உருவில் அமைவது என்றும் கருதலாம் (Gopala Krishanmachiriyar, 2011).

உரு என்பதற்குக் கேழ், குரு போன்ற சொற்களும் கேழின் பொருண்மையாகிய ஒளி உருவிலும் இணைகின்றது. எனவே, குணம், கேழ், குரு எனப் பல்வேறு நிலைகளில் நிறப் பொருண்மைகள் இடம் பெறுகின்றன.

## மேனி

மேனி என்ற சொல்லுக்கு நிறம் என்ற பொருள் உண்டு என்பதைத் தமிழ் அகராதி கூறுகின்றது. கம்பன் மேனி என்ற சொல்லை நிறப்பொருள் அடையுடனே என்று கூறுகின்றார்.

“செக்கர் மேனிப் பகழி செலுத்தினான்”

என்று வரும் தொடர் வெளிப்படுத்துகின்றது. ஓவியங்களில் மேனி நிறங்களாலானது. சிற்பங்களில் உருவத்திலானாது என்பதைக் கம்பனின் மேனி என்ற சொல் குறிப்பதைக் காணலாம் (Gopala Krishanmachiriyar, 2011).

## உருவம்

உருவம் என்ற சொல் நிறம் என்ற பொருளையும் கொண்டுள்ளது. கலையுருவம், ஓவிய உருவம், உருவமைத்தல், உருவம் வரைதல் என்ற சொற்கள் வடிவமாகவும் நிறம் கொண்டனவாகவும் வரும். கம்பன் உருவம் என்பதற்கு நிறம் என்றே கூறுகின்றார்.

“வெண்நிற நிறைநிறை வெள்ளம் என்னவும்

பன்நிறம் செறிந்து இடைபரந்த்து என்னவும்”

என்ற தொடர்கள் வெளிப்படுத்துகின்றன (Gopala Krishanmachiriyar, 2011). உருவம் நிறத்தால் ஒளியால், ஒலியால் வெளிப்படும், உருவம் பெறும் சிறப்புகளில் ஒன்று நிறம். திறம்பினும் நியாயமே திறப்பினும் என உருவம் ஒளியாகும் தன்மையது என்றும் வெளிப்படுத்துகின்றார். எனவே, வடிவம் என்பதை ஒளியாகவும், அதன் வெளிப்பாடு கலையாகவும் நிறத்தால் அமைகின்றது.

## முடிவுகள்

இலக்கியத்தில் இடம்பெறும் நிறம் மற்றும் வண்ணங்கள் வெளிப்பாட்டை செய்யுள் வழியாக அறியமுடிகிறது. தொல்காப்பியத்தில் இடம்பெறும் நிறம், நிறத்தின் வகைகளையும் தொல்காப்பியம் நூற்பாக்கள் வழியே அறிகிறோம். தொல்காப்பியம் கூறும் நிறத்தின் கோட்பாடுகள் மற்றும் சங்க இலக்கியத்தில் இடம்பெறும் வண்ணங்கள் வகைபாட்டை காணமுடிகிறது. தொல்காப்பியர் கூறும் வண்ணங்களின் வகை மற்றும் கம்பரின் வழி நிறம் என்பதையும் அதன் வேறு பெயர்கள் இலக்கியங்களில் எவ்வாறு வழங்கப்பெற்றன என்பதை அறிய முடிகிறது.

## References

Annamalai, S., (2004) Aganaanooru Moolamum Uraiyum, Koviloor madalayam, Koviloor, India.

Arunachalam, M., (1994) Tholkappiyam Porulathikaram Agathinaiyiyal Urai Valam, Madurai Kamaraj University, Madurai, India.

Avvai Duraisamy pillai, S., (2010) Purananooru Moolam Uraiyum, Poompuhar Pathippagam, Chennai, India.

Avvai Duraisamy pillai, S., (2012) Natrinnai Moolamum Velakauraiyum, Poompuhar Pathippagam, Chennai, India.

Dhatchanamoorthi, A., (2005) Ainkurunuru, New Century Book House, Chennai, India.

Gopala Krishanmachiriyar, V.M., (2011) Kambaramayanam - Sundarakandam, Uma Publication, Chennai, India.

Puliyur Kesigan, (2009) Paaripadal Moolamum Uraiyum, Paari Nilaiyam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License